24th July 1962]

Arrears of taxes (Panchayats)

* 601 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are any panchayats having arrears of taxes barred by limitation ; and

(*b*) if so, whether there is any proposal for writing off such items ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) There is no such proposal under the consideration of the Government. It is open to the Panchayats concerned to take action under the relevant provision in the Madras Panchayat Act.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: சார், சேலம் மாவட்டத்தில் பஞ்சாயத்து வரிகளை—வசூல் ஆகாத வரிகளை—கிராம முன்சீப்புகளை அவர்கள் கையிலிருந்து கட்டச் சொல்லுவது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. எம். தண்டாயுதபாணி : சார், 10 ஆண்டு காலமாக பஞ்சாயத்தில் வசூல் செய்யாத வரிகளை ஒரே ஆண்டில் வசூல் செய்ய கிராம அதிகாரிகள் முற்படுவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் அந்தத் தொகையை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் வசூல் செய்ய சர்க்கார் உத்திரவு போடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதில் சர்க்கார் தலையிடுவதாக உத்தேசம் இல்லை. அங்கே இருக்கிறவர்கள் பஞ்சாயத்துக்குத் தெரிவித்து இதைப் பற்றி ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

The Madras Vanaspathi, Limited, Villupuram.

* 602 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total grant sanctioned for the Villupuram Vanaspathi Limited ; and

(*b*) whether it is functioning now ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) A loan of Rs. 10 lakhs was sanctioned in November 1948 to the Madras Vanaspathi, Limited, Madras under the provisions of the Madras State-Aid to Industries Act, 1922 (Madras Act V of 1923). No grant was sanctioned.

(*b*) No, Sir.The factory is being repaired and is expected to start production in December 1962.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இப்போது இந்தத் தொழிற்சாலையை யார் எடுத்து நடத்த முன் வந்திருக்கிறார்கள் ? சர்க்காருக்கு வர வேண்டிய பணத்திற்கு என்ன பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதை எடுத்து நடத்துவதற்கு பழைய கம்பெனியை வாங்கியவர்கள் முன் வந்திருக்கிறார்கள். சர்க்காருக்கு அவர்கள் முதலுக்காக ரூ. 2,86,755 கொடுத்திருக்கிறார்கள். வட்டிக்காக ரூ. 74,534 கொடுத்திருக்கிறார்கள். மாதாமாதம் அங்கு என்னென்ன வேலைகள் செய்திருக்கிறார்கள் என்று அறிக்கை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வருஷத்திற்குள் அவர்கள் வேலை தொடங்கி விடவேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் இந்த அவகாசம் கொடுத்திருக்கிறோம்.